முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வேடசந்தூர்

முன்னிலை : திரு.B.பீட்டர், M.A., B.L.,

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி

வேடசந்தூர்.

திருவள்ளுவராண்டு 2057 பரபாவ வருடம் ஆனி மாதம் 26-ம் நாள்

2026-ம் ஆண்டு ஜூலை மாதம் 10-ம் நாள் வெள்ளிக்கிழமை

அசல் வழக்கு எண்.116/2021

(CNR.No.TNDG160001522021)

1. மாதவன்

2.கணேசன்

3.சந்திரா

4.நாகஜோதி

5.கனகவள்ளி

6.வெங்கிடதாய் .....வாதிகள்

//எதிர்//

1.பெருமாள்

2.கிருஷ்ணன் .....பிரதிவாதிகள்

இந்த வழக்கானது 04.10.2021-ம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, என் முன்பாக 12.06.2026-ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, வாதிகள்

தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.V.இரத்தினம்** அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.P.சரவணக்குமார்** அவர்கள் முன்னிலையாகியும் எதிருரை தாக்கல் செய்யாத காரணத்தினால் 24.03.2022-ம் தேதி பிரதிவாதிகளுக்கு எதிராக ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டும், வாதிகள் தரப்பு வாதம் கேட்கப்பட்டும், வாதிகள் தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்....

தீர்ப்புரை

இவ்வழக்கானது, தாவா B செடியூல் பொது வண்டிப்பாதை வழியாக A செடியூல் சொத்துக்களுக்கு சென்றுவர உரிமையுள்ளது என விளம்புகை பரிகாரம் கோரியும், தாவா A செடியூல் சொத்துக்களுக்கு வாதிகள் தாவா B செடியூல் பொதுவண்டிப்பாதை வழியாக சென்றுவருவதை பிரதிவாதிகள் யாதொரு தடையும், இடைஞ்சலும் செய்யாதவாறு நிரந்தரஉறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்ககோரியும், இதர பரிகாரங்கள் கோரியும் உரிமையியல் நடைமுறைச் சட்டம் ஆர்டர் 7 ரூல் 1-ன்படி வாதிகளால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1. வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரையின் சுருக்கம்:-

(1.1) ஆதியில் தாவா A,B செடியூல் சொத்துக்கள் 6 ம் வாதியின் கணவர் குருநாதன், அவர் சகோதரர்களான வெங்கிடுசாமி, குருசாமி, மாதவன், குமாரசாமி,

கிருஷ்ணசாமி ஆகியோர்களின் தந்தை பெருமாள்சாமி நாயக்கருக்கு பூர்வீகப்பாத்தியப்பட்ட சொத்துக்களாகும். ஷை பெருமாள்சாமி நாயக்கர் தன் மக்களான குருநாதன், வெங்கிடுசாமி, குருசாமி, மாதவன், குமாரசாமி, கிருஷ்ணசாமி ஆகியோர்களை வாரிசுகளாக விட்டுவிட்டு 1950 ம் ஆண்டு இறந்துவிட்டார். அதன்பின் குருநாதன் 1 முதல் 6 வாதிகளை வாரிசாக விட்டுவிட்டு 27.04.2015 ம் தேதி இறந்துவிட்டார். வெங்கிடுசாமி தன் மக்கள்களான சுரேஷ்குமார், சுமதி, சுசீலா ஆகியோர்களை வாரிசாக விட்டுவிட்டு 13 ஆண்டுகளுக்கு முன்பு இறந்துவிட்டார். குருசாமி தன் மக்கள்களான சுதர்சன், தேவி ஆகியோரை வாரிசாக விட்டுவிட்டு 30 ஆண்டுகளுக்கு முன்பு இறந்துவிட்டார். மாதவன் தன் மக்கள்களான மாதவி, குருபிரசாத், சாந்தி ஆகியோர்களை வாரிசாகவிட்டுவிட்டு 13 ஆண்டுகளுக்கு முன்பு இறந்துவிட்டார். கிருஷ்ணசாமி தன்மனைவி அக்கம்மாள் மக்கள் பத்மா, மாதவி, பாலமுருகன் ஆகியோர்களை வாரிசாக விட்டுவிட்டு 20 ஆண்டுகளுக்கு முன்பு இறந்துவிட்டார். வழக்கு சொத்துக்கள் பெருமாள்சாமி நாயக்கருக்கு பூர்வீகமானதாலும், ஷையார் இறந்தபின் அவர் மக்களும் அவர்களது வாரிசுகளும் வழக்கு A,B செடியூல் சொத்துக்களை பொதுவாக வைத்து அனுபவிப்பதில் சிரமங்கள் ஏற்பட்டுவந்ததால் மூத்த மகன் குருநாதனுக்கும் இளைய மகன் கிருஷ்ஷசாமி இறந்ததால் அவர் மனைவி அக்கம்மாளுக்கும், குருசாமி மகன் சுதர்சன், லேட்.மாதவன் மகன் குருபிரசாத், வெங்கிடுசாமி மக்கள் சுரேஷ்குமார், சந்திரகுமார், பெருமாள்சாமி மகன்

குமார்சாமி ஆகிய 5 பேர்களையும் வழக்கு சொத்துக்களில் உள்ள 4/6 பாகத்தை 26.02.2007 ம் தேதி ஒரு பாகபாத்திய விடுதலைப்பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார்கள். வழக்கு சொத்துக்கள் மொத்தம் 6 பாகம் அதில் 4/6 பாகத்தை 26.02.2002 ம் தேதி குருநாதனுக்கும் அக்கம்மாளுக்கும் பாகபாத்தியவிடுதலை எழுதிக்கொடுத்த 4/6 பாகம் நீங்கலாக மீதமுள்ள 2/6 பாகத்தில் 1/6 பாகம் வெங்கிடுசாமிக்கு பாத்தியப்பட்டிருந்ததை சரியான பிரதிபிரயோஜனத்தின்பேரில் 1,2 பிரதிவாதிகள் 24.02.2009 ம் தேதி கிரையம் பெற்றுள்ளார்கள். 26.2.2007 ம் தேதிய பாகப்பாத்திய விடுதலைப்பத்திரப்படி கிருஷ்ணசாமி மனைவி அக்கம்மாளுக்கு கிடைத்த பாதி பாக சொத்துக்களை சரியான பிரதிபிரயோஜனத்தின் பேரில் 1,2 பிரதிவாதிகள் 2.3.2009 ம் தேதி கிரையம் பெறுகின்றார்கள்.

(1.2) வழக்கு சொத்துக்களில் 26.02.2007 ம் தேதி பாகப்பாத்திய விடுதலைப்பத்திரப்படி கிடைத்த சொத்துக்களும் 24.02.2009, 02.03.2009 தேதிய கிரையப்பத்திரப்படி 1,2 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களும் ஆதியில் பெருமாள்சாமி நாயக்கருக்கு பாத்தியப்பட்ட சொத்துகளாகும். இரு கிணறுகளில் வாதிகளுக்கு சரிபாதியும் பிரதிவாதிகளுக்கு சரிபாதியும் உரிமையுள்ளன. ஷை நிலங்கள் கிணறுகளுக்கு செல்ல கெச்சாணிபட்டி to குரும்பபட்டி தென்வடல் ரோட்டிலிருந்து பட்டத்து நாயக்கன்குளத்தின் வடகிழக்கு ஓரம் கிழமேலாக தென்வடல் A செடியூல் சொத்துக்களுக்கு தாவா B செடியூல் பொது வண்டிப்பாதை

வழியாக வண்டி வாகனங்கள் உபயவாதிகளை எடுத்துச்சென்று வருகிறார்கள். தாவா B செடியூல் வண்டிப்பாதை வாதிகளுக்கும், பிரதிவாதிகளுக்கும் பொதுப்பாத்தியப்பட்டவையாகும். தாவா B செடியூல் பொதுவண்டிப்பாதை வரைபடத்திலும், மாதிரி வரைபடத்திலும் உள்ளவாறு உபயவாதிகள் தாவா B செடியூல் பொதுவண்டிப்பாதையை அனுபவித்து வருகிறார்கள். தாவா B செடியூல் வண்டிப்பாதையின் இருபுறமும் உள்ள முள் மரங்களை சரிசெய்வதற்காக வாதிகள் 18.11.2020 ம் தேதி வாக்கில் நில அளவைக்கு வருவாய்துறையில் படி கட்டியும் நில அளவையரும் 06.02.2021 ம் தேதி அளவு செய்ய இருதரப்பினருக்கு அறிவிப்பு கொடுத்து, அளவு செய்ய வந்த நில அளவையரை பிரதிவாதிகள் அளவு செய்யவிடாமல் தடுத்துள்ளனர். இதனால் வாதிகளுக்கு ஈடுகட்ட முடியாத நட்டமும், இழப்பும் ஏற்பட்டுள்ளது. தாவா B செடியூல் பொதுவண்டிப்பாதை வழியாக தாவா A செடியூல் நிலங்களுக்கு வாதிகள் வண்டி வாகனங்களை எடுத்து செல்வதை பிரதிவாதிகள் மேலும் 07.08.2021 ம் தேதி தடையும், இடைஞ்சலும் செய்துவருகிறார்கள். எனவே, தாவா B செடியூல் வண்டிப்பாதை வழியாக தாவா A செடியூல் சொத்துக்களுக்கு சென்றுவர உரிமையுள்ளதென விளம்புகை பரிகாரம் வழங்ககோரியும், அதன்தொடர்ச்சியாக தாவா A செடியூல் சொத்துக்களுக்கு வாதிகள் தாவா B செடியூல் பொதுவண்டிப்பாதை வழியாக சென்றுவருவதை பிரதிவாதிகள் யாதொரு தடையும், இடைஞ்சலும் செய்யாதவாறு நிரந்தஉறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்ககோரியும் இவ்வழக்கு தாக்கல்

செய்யப்பட்டுள்ளது.

2. பிரதிவாதிகள் அழைப்பாணை பெற்று ஆஜரின்மையாலும், எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததாலும் பிரதிவாதிகள் 24.03.2022 தேதி தோன்றா தரப்பினராகியுள்ளார்கள்.

3. வாதிகள் தரப்பில், 1ம் வாதி மாதவன் வா.சா.1 ஆக, விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்களும் மற்றும் நீ.ம.சா.ஆ.1 மற்றும் நீ.ம.சா.ஆ.2 குறியீடு செய்யப்பட்டுள்ளன. பிரதிவாதிகள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

4. **<u>தீர்வு</u>:**

வாதிகள் தரப்பு வாதம் கேட்கப்பட்டது. சாட்சிய சான்றாவணங்கள் அனைத்தும் பரிசீலனை செய்யப்பட்டன. வாதிகள் தரப்பில் 1ம் வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு சாட்சி பிராதை தழுவி சாட்சியம் அளித்துள்ளார்.

5. தாவா B செடியூல் பொதுவண்டிப்பாதை வழியாக A செடியூல் சொத்துக்களுக்கு சென்றுவர உரிமையுள்ளது என வாதிகளுக்கு விளம்புகை பரிகாரம் வழங்ககோரியும், தாவா A செடியூல் சொத்துக்களுக்கு வாதிகள் தாவா B செடியூல் பொதுவண்டிப்பாதை வழியாக சென்றுவருவதை பிரதிவாதிகள் யாதொரு தடையும்,

இடைஞ்சலும் செய்யக்கூடாது என நிரந்தரஉறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க கோரி தாக்கல் செய்துள்ளனர்.

6. வாதிகள் வழக்குரையிலும், நிரூபணவாக்குமூலத்திலும் தாவா A,B செடியூல் சொத்துகள் 6 ம் வாதியின் கணவரும், வாதிகளின் தந்தையுமான பெருமாள்சாமி நாயக்கருக்கு பூர்வீக பாத்தியப்பட்டது என்றும், அவருடைய இறப்பிற்கு பின்பு அவற்றை பொதுவாக வைத்து அனுபவித்து வந்து பின்பு அதை தொடர்ந்து அனுபவிப்பதில் சிரமங்கள் ஏற்பட்டதால் பாகப்பிரிவினை ஏற்படுத்தப்பட்டது என்றும், பெருமாள்சாமியின் வாரிசுகளான சுதர்சன், குருபிரசாத், சுரேஷ்குமார், சந்திரகுமார், குமாரசாமி ஆகிய ஐந்து பேரும் தங்களுக்குரிய பாகபாத்தியத்தை பொறுத்து 26.02.2007 ம்தேதி ஒருபாகப்பாத்திய விடுதலைப்பத்திரம் எழுதிகொடுத்தார்கள் என்றும், மீதமுள்ள 2/6 பாகத்தில் 1/6 பாகம் வெங்கிடுசாமிக்கு பாத்தியப்பட்டிருந்ததை சரியான பிரதிபிரயோஜனத்தின்பேரில் 1,2 பிரதிவாதிகள் 24.02.2009 ம் தேதி கிரையம் பெற்றனர் என்றும், கிருஷ்ணசாமி மனைவி அக்கம்மாளுக்கு பாகபாத்தியவிடுதலைப்பத்திரப்படி கிடைத்த பாகசொத்துகளை 1,2 பிரதிவாதிகள் 02.03.2009 ம் தேதி கிரையம்பெற்றார்கள் என்றும், எனவே மேற்படி கிரையப்படி 1,2 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்துகள் ஆதியில் பெருமாள்நாயக்கருக்கு பாத்தியப்பட்ட சொத்துகள் ஆகும் என்றும், அதில் உள்ள இருகிணறுகளில் தங்களுக்கு சரிபாதி பாகபாத்தியம் உள்ளது என்றும், மேற்படி

நிலங்கள் மற்றும் கிணறுகளுக்கு செல்ல கெச்சாணிபட்டியிலிருந்து குரும்பபட்டி தென்வடல் ரோட்டிலிருந்து பட்டத்தநாயக்கன்குளத்தின் வடகிழக்கு ஓரம் கிழமேலாக தாவா A செடியூல் சொத்துகளுக்கு தாவா B செடியூல் பொது வண்டிப்பாதை வழியாக வண்டி வாகனங்களை எடுத்துச்சென்று வருகிறோம் என்றும், அது இருதரப்பினருக்கும் பாத்தியப்பட்ட பொதுப்பாதை என்றும், மேற்படி விபரங்கள் பாகபாத்திய விடுதலைப்பத்திரம் மற்றும் பிரதிவாதிகளின் கிரையப்பத்திரங்களிலும் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளன என்றும், மேற்படி பொதுப்பாதையை வாதிகள் அனுபவித்து வருகின்றனர் என்றும், இந்நிலையில் 18.11.2020 ம் தேதி வாக்கில் B செடியூல் பொதுவண்டிப்பாதையின் இருபுறமும் உள்ள முள்மரங்களை சரிசெய்வதற்காக நில அளவையருக்கு படிகட்டியும், நில அளவையர் 06.02.2021 ம் தேதி இருதரப்பினருக்கும் அறிவிப்பு கொடுத்துவிட்டு வந்து அளவீடு செய்ய வந்தவரை அளக்க விடாமல் தடுத்துவிட்டார்கள் என்றும், அதனால் தங்களுக்கு ஈடுகட்ட முடியாத இழப்பும், நட்டமும் ஏற்பட்டது என்றும், எனவே, தாவா A செடியூல் சொத்துகளுக்கு தாவா B செடியூல் பொதுவண்டிப்பாதையாக சென்றுவர உரிமையுள்ளது என விளம்புகை வழங்கும்படியும், அதன் தொடர்பரிகாரமாக தாவா B செடியூல் பொதுவண்டிப்பாதை வழியாக வாதிகள் சென்றுவருவதை பிரதிவாதிகள் யாதொரு தடையும், இடைஞ்சலும் செய்யக்கூடாதென நிரந்தரஉறுத்துக்கட்டளை வழங்கவேண்டும் என்றும் கூறியுள்ளனர்.

7. மேலே கண்டபடி 1,2 பிரதிவாதிகள் அழைப்பாணை பெற்று நீதிமன்றத்தில் முன்னிலையாகவில்லை என்பதால் அவர்களுக்கு எதிராக ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

8. வாதிகள் தரப்பில் வாதிகளின் உறவுமுறையை காட்டக்கூடிய வா.சா.ஆ.1 கொடிவழி ஜாபிதா தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்துக்களை விளக்கக்கூடிய வா.சா.ஆ.2 மாதிரிவரைபடம் வாதிகள் தாக்கல் செய்துள்ளனர். வா.சா.ஆ.3 என்பது குருநாதன் அக்கம்மாளுக்கு மற்ற பாகஸ்தர்கள் எழுதி கொடுத்த பாகப்பாத்திய விடுதலைப்பத்திரமாகும். வா.சா.ஆ.3 ன்படி பெருமாள்சாமி மகன் குருநாதன், கிருஷ்ணசாமி மனைவி அக்கம்மாள் ஆகியோருக்கு குருசாமி மகன் சுதர்சன், மாதவன் மகன் குருபிரசாத், வெங்கிடுசாமி மக்கள் சுரேஷ்மார், சந்திரகுமார், பெருமாள்சாமி மகன் குமாரசாமி ஆகிய ஐந்து பேரும் சேர்ந்து தங்களுக்கு பாத்தியப்பட்ட 4/6 பங்கு சொத்துகளை பொறுத்து பாகப்பாத்திய விடுதலைப்பத்திரம் எழுதிகொடுத்துள்ளார்கள் என்பது தெரியவருகிறது. வா.சா.ஆ.4 மற்றும் வா.சா.ஆ.5 ன்படி 1,2 பிரதிவாதிகளுக்கு சுரேஷ்குமார் வகையறா மற்றும் அக்கம்மாள் வகையறா எழுதிகொடுத்த கிரையப்பத்திரமாகும். வா.சா.ஆ.6 என்பது வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள கிஸ்தி ரசீதுகள் ஆகும். வா.சா.ஆ.7 தாவா சொத்துகளுக்கான பட்டா எண்.2117, 2115, 2249, 2250, 2118 ஆகும். மேற்கண்ட ஆவண சாட்சியங்களையும், வா.சா.1 மற்றும் வா.சா.2 ஆகயோரின்

சாட்சியங்களை பரிசீலிக்கும்போது தாவா சொத்து பெருமாள்நாயக்கருக்கு பாத்தியப்பட்டது என்பதும், அவருடைய இறப்பிற்கு பின்பு வாதிகளின் வகையறாக்கள் அனுபவித்து வந்துள்ளனர் என்பதும் 1,2 பிரதிவாதிகளுக்கு சுரேஷ்குமார் வகையறா மற்றும் அக்கம்மாள் வகையறா ஆகியோர் பெருமாள்நாயக்கர் பெயரில் இருந்து தங்களுக்கு பாகமாக கிடைத்த சொத்துகளை பொறுத்து கிரையம்செய்துகொடுத்துள்ளனர் என்பதும் வாதிகள் தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது.

9. வா.சா.ஆ.2 யை பரிசீலிக்கும்போது தாவா A செடியூல் சொத்துகளை அடைவதற்கு தாவா B செடியூல் சொத்துகள் வழியாகத்தான் செல்லமுடியும் என்று காட்டப்பட்டுள்ளது. நீ.ம.சா.ஆ.1 மற்றும் நீ.ம.சா.ஆ.2 நீதிமன்ற ஆணையர் மற்றும் வரைபடத்தில் தாவா A செடியூல் சொத்துகளுக்கு தாவா B செடியூல் சொத்தான வண்டிப்பாதை வழியாகத்தான் செல்லமுடியும் என்று காட்டப்பட்டுள்ளது. பிரதிவாதிகளின் சொத்துகளுக்கு செல்வதாக இருந்தாலும், தாவா B செடியூல் சொத்துகளின் வழியாகத்தான் செல்லமுடியும் என்று தெரியவருகிறது. மேலும், ஆணையர் அறிக்கையில் B செடியூல் சொத்துகள் கெச்சாணிப்பட்டி to குரும்பபட்டி செல்லும் தார்ரோட்டிலிருந்து வடக்கே சர்வே எண்.199/1 குளத்தின் வழியாக சென்று சர்வே எண்.199/1 பட்டத்தநாயக்கன்குளத்திற்கு கிழக்கே B செடியூல் சொத்துகள் அமைந்திருந்தது என்றும், மேற்படி குளத்தின் கரை 5 அடி

உயரம் இருந்தது என்றும், சர்வே எண்.199/1 லிருந்து பாதையானது வடக்கு பகுதியாக சர்வே எண்.198/1A4 ன் வழியாக A செடியூல் சொத்துகளின் வழியாக சென்றடைகிறது என்றும், மேலும், தாவா A செடியூல் சொத்துகளுக்கு B செடியூல் சொத்து வழியாக மட்டும் சென்றுவர முடியும் என்றும் மாற்றுப்பாதை ஏதும் இல்லையென்றும், சர்வே எண்.198/1A4 பட்டா எண்.2250 பெருமாள், கிருஷ்ணன், குருநாதன் ஆகியோர் பெயரில் இருந்தது என்று கூறியுள்ளார்.

10. மேற்படி வாதிகள் தரப்பு சாட்சியங்களையும், நீதிமன்ற ஆணையரின் அறிக்கையையும் மறுத்து தாவா B செடியூல் சொத்து பொதுவண்டிப்பாதை இல்லையென்பதை நிரூபிப்பதற்கு பிரதிவாதிகள் இந்நீதிமன்றத்தில் முன்னிலையாகவுமில்லை, அவர்கள் தரப்பில் எந்த ஆவணங்களும் தாக்கல் செய்யப்படவில்லை. 1,2 பிரதிவாதிகள் அழைப்பாணை பெற்றுக்கொண்டு நீதிமன்றத்தில் ஆஜராகவில்லையென்பது வாதிகளின் வழக்கை பிரதிவாதிகள் ஒப்புக்கொள்வதாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, மேற்கண்ட காரணங்களின் அடிப்படையில் வாதிகள் கோரியுள்ள விளம்புகை பரிகாரம் கிடைக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. மேலும், வாதிகள் தாவா A செடியூல் மற்றும் B செடியூல் சொத்துகளில் அனுபவம் செய்து வருகின்றனர் என்பதற்கு வா.சா.ஆ.6 மற்றும் வா.சா.ஆ.7 தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும், வா.சா.1 ன் சாட்சியத்தின் அடிப்படையில் கடந்த 06.02.2021 ம் தேதி நிலஅளவையர்

தாவா B செடியூல் சொத்தை அளவீடு செய்ய வந்தபோது தடுத்துநிறுத்தியுள்ளனர் என்பதும் நிரூபிக்கப்பட்டுள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது. எனவே, தாவா B செடியூல் சொத்தை வாதிகள் அனுபவம் செய்து வருவதை பிரதிவாதிகள் எவ்விதத்திலும் தடையும், இடைஞ்சலும் செய்யக்கூடாது என்பதற்கு நிரந்தரஉறுத்துக்கட்டளை பரிகாரம் அவசியம் என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது. எனவே, மேற்கண்ட காரணங்களின் அடிப்படையில் வாதிகள் கோரியுள்ள நிரந்தஉறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

இறுதியாக, கீழ்க்கண்ட உத்தரவுகளுடன் தாவா வழக்கு அனுமதிக்கப்பட்டு இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கப்படுகிறது:-

1) **வாதிகள் கோரியுள்ளவாறு தாவா B செடியூல் பொது வண்டிப்பாதை வழியாக A செடியூல் சொத்துகளுக்கு சென்றுவர உரிமையுள்ளது என்ற விளம்புகை பரிகாரம் மற்றும் நிரந்தரஉறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கத்தக்கது.**

2) **செலவுத்தொகை இல்லை.**

இந்த தீர்ப்பு என்னால் சுருக்கெழுத்து-தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026-ம்ஆண்டு ஜூலை மாதம் 10-ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

B.Peter Digitally signed by B.Peter

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

வேடசந்தூர்.

1. வாதிகள் தரப்பு சாட்சிகள் :-

1. வா.சா.1 - மாதவன்

2. வாதிகள் தரப்பு சான்றாவணங்கள்:-

வ.எண்.	தேதி	ஆவண விபரம்	குறிப்பு
வா.சா.ஆ.1	14.09.2021	கொடிவழி ஜாபிதா	அசல்
வா.சா.ஆ.2	14.09.2021	மாதிரி வரைபடம்	அசல்
வா.சா.ஆ.3	26.02.2007	குருநாதன் அக்கம்மாளுக்கு மற்ற பாகஸ்தர்கள் எழுதிக்கொடுத்த விடுதலைப்பத்திரம்	அசல்
வா.சா.ஆ.4	24.02.2009	1,2 பிரதிவாதிகளுக்கு சுரேஷ்குமார் வகையறா எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம்	உண்மை நகல்
வா.சா.ஆ.5	02.03.2009	1,2 பிரதிவாதிகளுக்கு அக்கம்மாள் வகையறா எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம்	உண்மை நகல்
வா.சா.ஆ.6	25.02.2019	கிஸ்தி ரசீது (எண்ணிக்கை-4)	அசல்
வா.சா.ஆ.7	30.10.2010	கணினி சிட்டா (பட்டா எண்.2117, 2115, 2249, 2250, 2118)	உண்மை நகல்

வ.எண்.	தேதி	ஆவண விபரம்	குறிப்பு
வா.சா.ஆ.8	27.04.2015	குருநாதன் இறப்பு சான்றிதழ்	நகல்(அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது)
நீ.ம.சா.ஆ.1	-----	நீதிமன்ற ஆணையர் அறிக்கை	அசல்
நீ.ம.சா.ஆ.2	-----	நீதிமன்ற ஆணையர் வரைபடம்	அசல்

3. பிரதிவாதிகள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்:-

இல்லை.

B.Peter Digitally signed by B.Peter

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

வேடசந்தூர்.